இந்துசாதனம்.

THE HINDU ORGAN.

பத்திரிகைக்கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ 5-00
இலங்கை, இந்தியா: ,, ரூ. 8-00
தொலைப்பகுதி: ,, ரூ 9-00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-00
,, அரைக்கலம் ரூ. 4-50
,, கால்கலம் ரூ. 3-00
அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பணம் அனுப்பினாலன்றிப் பிரசுரிக்கப்படா.

புத்தகம்—௪௰. யாழ்ப்பாணம்:—விபவஹு புரட்டாசிமீ ௰௯. (1928 அக்டோபர் 4) வியாழக்கிழமை இலக்கம்—௨௭.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன் முன் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை என் விளம்பரத்தில் உலகன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, கிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, கீர்மூள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்துக்கு உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரிகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்த்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன்மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்

(M. 36.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

———:;———

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டக்கோவைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 8-ம் வெயபர் சங்கக்கடையிற் வெற்றிலைவுக் கைக்கலை வைப்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின 12-ம் பிரிவின்படி பிரசித்தவலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1927-ம் ஆ 4-ம் மீ

இல.	தி.	ரூ.	ச.	நகைகளின் விபரம்.
10757	1	15		இமிற் சிப்புக் கடுக்கன் சோடி 1
10761	,,	8		வெ கொலிசு சோடி 1
1 771	,,	26		பொன் தாலிக்கொடி 1 பழு
10773	,,	8		வெ. வெட்டுக் காப்புத் துண்டு 4
10780	,,	6		கொப்புச் சிமிக்கி சோடி 1 மயில் மூக்குத்தி 1
10798	2	20		இமிற காற்தாலி சோடி 1
10806	,,	25		பொன் தாலிக்கொடி 1 ப.
10807	,,	23		தாலித்தட்டு 10, குடம் 1 பின் இல்லை
10810	,,	75	04	பீலிக்காப்பு 1 தங்கக் காப்பு 3
10·40	,,	6		கைவிலங்கு 1
10846	,,	22	04	தங்கக்காப்பு சோடி 1
10850	3	65		தாலிக்கொடி 1 பின் இல்
10915	4	12	04	கொப்புச்சிமிக்கி சோடி 1 பழுது
10919	,,	20		பொன் கம்பிப்புரசணட்டியல் 1
10936	,,	6		வெ எஸ்கதனை சோடி 1
10957	5	22		பொன் தாலிக்கொடி 1 பழுது
10967	,,	6	04	கொப்புச்சிமிக்கி சோடி 1
10990	6	12		குவை அரைப்பவுண் 2
11012	,	8		வெ. ½ கொத்துக்காப்பு சோடி 1
11020	,,	6		வெ. அரைஞாண் 1
11084	8	7		படக்கூர் 1 வளையல் 7
11 06	9	35		பட்டக்காப்பு சோடி 1
11145	..	25		மு இ பத கல்லட்டியல் 1
11157	10	7		பொன் கூடு 1 கொப்புச் சிமிக்கி சோடி 1
11167	,,	23		வெ. பாதசரம் சோடி 1
11214	11	212		பீலிக்காப்பு சோடி 1 கடமன் கொலிசு சோ 1 ஒரு பட்டிமாலை 1 திருகு 1 ப
11218	,,	6		மு இ மயிர்மாட்டி சோ 1
11251	,,	10		சிறு பூசார்திரமுடன் பவ விதமணி 8 வெ சிறு கதனை சோடி 1
11258	,,	6	50	வெ சலங்கை சோடி 1
1315	12	30	04	கல் அட்டியல் 1
11324	,,	7		இமிற் கல்மோதிரம் 1
11335	,,	26		கைச்சங்கிலி 1
11345	,,	7	04	பினைல் கலாசமை மோதிரம் 1
11348	,	15		வெ பாதசரம் சோடி 1
1 350	,,	6		கொப்புச்சிமிக்கி சோடி 1
113 6	14	200	04	இமிற் பத சங்கிலியட்டியல் 1 கல் 1 இல்லை கல் காப்பு சோடி 1 க. இ கல்வேலை செய்த காப்பு சோடி 1
11363	,,	6		வெ எஸ்கதனை சோடி 1
11414	15	7		வெள்ளைக்கல் மோதிரம் 1
1.4 7	,,	15		இமிற் சிப்புக்கடுக்கன் சோடி 1 க. இ
11424	,,	23	04	வெ. பாதசரம் சோடி 1
11433	,.	7		வெ எஸ்கதனை சோடி 1
11441	16	6	04	ஒருகல் செருகு பூ தோடு சோடி 1 க. இல்லை
11460	,,	6	50	வெ சங்கிலிமாலை 1, வெ. அரைக்காப்பு சோடி 1
1146	,,	20		பொற் சரடு 1
11519	17	8		ஒருகல் செருகு தோடு சோ 1
11527	,	12		சங்கிலிக்கொடி 1 [க.] இ.
11547	18	5	04	பத கம்பிப்புரசணட்டியல் 1
11586	,,	10		சவுக்குமணி 1க்கு மணி 22 அருமணி 6 பழுது
11592	,,	6		குவை. லேசெய்பவுண் 1டன் சங்கிலி 1
11593	,,	60		கண்டசரம் 1
11600	19	15		தோடு சோடி 2
11624	,	28		பத பொட்டுச் சக்கமணி 1க்கு மணி 22
11703	,,	16		இமிற் காதோலை சோடி 1
11723	21	10	04	பசைக்கல் மோதிரம் 1
11758	,	60		கொலிசுக்காப்பு சோடி 1
11765	22	60	04	ஒப்பின் காப்பு சோடி 1
11816	23	11		கைவிலங்கு 1 க. இ முறி
11824	,,	15	04	மோதிரம் 1
11837	,,	6		கொப்புச்சிமிக்கி சோடி 1
11851	,,	39		சிறு பூவுடன் பொட்டுமணி 1
11853	,,	60		பட்டக்காப்பு சோடி 1
11857	,,	8		வெ எஸ்கதனை சோடி 1
11891	,	5	50	செருகு தோடு சோடி 1 க இ
1 930	25	12		வளையல் 8
11959	,,	2		வெ பாதசரம் சோடி 1
11961	26	6		வெ எஸ்கதனை சோடி 1
11974	,,	7		மணியட்டியல் 1
11975	,,	12		மோதிரம் 1
11983	,	60	04	சங்கிலியட்டியல் 1
12015	27	85	04	அமரிக்கன் 20 டலர் காணயம் 1டன் சங்கிலி 1
12057	28	40		மணிக் கோர்வை 1க்கு மணி 36
12066	,,	15	04	வெ. பாதசரம் சோடி 1
12094	,,	20	04	தங்ககாப்பு சோடி 1, கைவிலங்கு 1
12098	,,	10	04	தட்டு வளையல் 6 முறியல்
5 மீ				
12 80	1	12		தங்கப்பவுண் 1
12206	,,	61	04	தங்க அரைஞாண் 1, இமிற் கல் திருகு 1
12207	,,	19	04	மோதிரம் 1, சிறுகல் மோதிரம் 1, புலிநகப் பூச் 1
12208	,	6		சிறு செருகுதோடுசோடி 1, இமிற்கல் மினனி 1, வெள்ளைக்கல் மினனி 1, தட்டைக்குச்சு சோடி 1
12212	,,	12	80	பத. சவுக்கமணி 1க்கு மணி 16
12217	,,	7		கொப்புச்சிமிக்கி சோடி 1
12218	,	11		மோதிரம் 1
12249	,	12		இமிற் தோடு சோடி 1
12256	2	26		பீலிக்காப்பு 1
12271	,,	6		குவை ½ பவுண் 1
12313	3	12		வளையல் 8
12347	,,	50		பட்டக்காப்பு சோடி 1
12368	5	15	04	சம்புறவளையல் 1
12413	,,	12		குலைகடுக்கன் சோடி 1 க இ, வெ அரைஞாண் 1
12414	,,	215	04	வேலைச்செய்த அமரிக்கன் 10 டலர் காணயம் 1 உடன் உவாட்சச்சங்கிலி 1 லொக்கற்றுடன் ஒருபட்டுச்சங்கிலி 1 ப.
12420	,,	5	50	தங்கக் காப்பு 1
12442	6	25	04	இமிற் கவுத்தோர் 1
12468	7	10	04	தங்கக் காப்பு சோடி 1
12492	,,	19		பொன் தாலிக்கொடி 1
125.8	8	14		குலைகடுக்கன் சோடி 1
12524	,,	6		பிரப்பமணி 17 பழுது
12534	,,	40		கைவிலங்கு 1, இமிற்கல் மோதிரம் 2 முத்து 1 இ, பிருஞ்சுபவுண் 6
12537	,,	45		வெள்ளை கயிச்சுக்கல் 2
12597	9	47		சங்கிலியட்டியல் 1
12620	10	20		பின் கோர்க்கி 1
12624	,,	6		கொப்புச்சிமிக்கி சோடி 1
12675	11	75		தப்பிலைக்காப்பு சோடி 1
12688	,,	12		கைவிலங்கு 1 க. இ, வெ. அரைஞாண் 1
12696	,,	11		சவடி மூட்டு 1
12727	12	8		வெ பழைய கதனை 3
12787	,,	55		½ பவுண் 1, சம்புறவளையல் 2 பொருத்தக்காப்புசோ 1
12740	,,	5	50	வெ. அரைஞாண் 1
12746	,,	6		பொன் தோடு சோடி 1
12772	13	10		தங்கக்காப்பு சோடி 1
12789	,,	50		கைச்சங்கிலி 1
12854	14	25		பொன் தாலிக்கொடி 1 ப.
12873	15	36		பொன் தாலிக்கொடி 1ப
12923	16	15	50	பொன் சரடு 1 பழுது
12935	,,	100	04	மணிக் கோர்வை 1க்கு மணி 31
12947	,,	6		பொன் தோடு சோடி 1
12948	,,	12		குலைகடுக்கன் சோடி 1
12991	17	9		கூடு 1
12998	,,	12		தங்கக்காப்பு சோடி 1
13004	,,	18		கலாவரை மோதிரம் 1
13038	,,	18		வெ பழைய பாதசரசோ 1
13127	20	16		ஒரு பட்டிமாலை 1
13172	21	6		வளையல் 4
13176	,,	25		பீலிக்காப்பு 1
13184	,,	8		இதச் சுத்திருகு 1
13207	,,	11	50	குலைகடுக்கன் சோடி 1 க. இ
13208	,,	15		இமிற் காதோலை சோடி 1
13244	22	30		பொன் தாலிக்கொடி 1
13247	,,	21		வெ பாதசரம் சோடி 1
13250	,,	21		கொப்புச்சிமிக்கி சோடி 1 க. இ.
13275	23	60		கல் அட்டியல் 1 க இ.
13285	,	[illegible]		இ கலாவரை மோதிரம் 1
13413	25	20		மணியட்டியல் 1
13430	26	10		தங்கக்காப்பு சோடி 1
134[illegible]	,	65		பி கல் அட்டியல் 1
13456	,,	35		கைச்சங்கிலி 1
13483	,,	20		வெ பாதசரம் சோடி 1 ப.
13490	27	10		இமிற்கல் மோதிரம் 1
13499	,,	75		பட்டக்காப்பு சோடி 1
13516	28	40		பீலிக்காப்புசோ 1 க 1 இ.
13575	,,	10		வெ. எஸ்கதனை சோடி 1
13609	30	7		ஒருகல் செருகுதோடு சோ 1
13618	,,	14		சவுக்குமணி 1க்கு மணி 27
13625	,,	57		தாலிக்கொடி 1
13628	,	30		பொன் 1 பட்டிமாலை 1
13673	31	15	04	இமிற பொன்கவுத்தோர் 1
13674	,,	75		இ பத. கல் அட்டியல் 1
13691	,,	46		பட்டக்காப்பு சோடி 1
13696	,,	6	04	கொப்புச்சிமிக்கி சோடி 1
13699	,,	12		வெ. சங்கிலி 1
13701	,,	20		தங்க அரைஞாண் 1
13704	,,	18		வெ. பாதசரம் 2

விற்பனவு:—விபவஹு புரட்டாசிமீ 30-ந் திகதிக்குச் சரியான 1928-ம் ஆ அக்டோபர் 15உ திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் எழுப்பட்ட சகைகிறதகைய மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாதவுடையார்,
வெத்திலைக்கடைந்தர்,
திரிகோணமலை.

(Mis. 1302)

இன்னும் முதன்மை ஸ்தானமே!

கோவுத் தைலங்க ளென்று சொல்லி "டஜன்" கணக்காய்க் கேள்விப்படுகிறீர்கள். ஆனால் கோவைத் தீர்ப்பதிற் சிறந்தது என்று சொல்லக் கூடியது

லிட்டில்ஸ் ஓரியென்டல்பாம்

தைலம்தான்.

43-வருடங்களாய் உண்மையான அனுபோகத்தில் உசிதமாய் நின்று, தலைவலி, சரப்புவலி, கீல்வாய்வு, தடைப்பிடிப்பு, வாதம், சுளுக்கு, தொண்டைநோ, நெஞ்சுச்சளி முதலியவைகளுக்கு
நிச்சயமான
சுறுக்கான
தீங்கில்லாத
தைலம்
என்று ருசிகைப்பெற்றது.

LITTLE'S
ORIENTAL BALM

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்.

4—28. Little's Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.

(Y. 61.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஹு
புரட்டாதிமீ கஉ வியாழக்கிழமை.

சனப்பிரதிநிதிகள்மீது சுமத்திய அபவாதம்.

இலங்கை அரசியல் விவகாரங்களை ஆராய்ந்து செல்லும்படி சில காலத்தின் முன் இங்கிலாந்திலிருந்து இங்கு வந்து மீண்ட டனமூர் விசாரணைச்சங்கத்தார் பின்னர்த் தாம் இலங்கை அரசியல் விஷயமாக வெளியிட்ட அறிக்கைப்பத்திரத்தில் சனப் பிரதிநிதிகளாயுள்ள சட்டநிருபண சபை அங்கத்தினர்மீது சில அபவாதத்தைச் சுமத்தியிருக்கின்றனர். இது சட்டநிருபணசபைப் பிரதிநிதிகளுட் பெரும்பாலார்க்கு அதிக ஆத்திரத்தை விளைக்கலாயிற்று. குறித்த சங்கத்தார் கூறிய அபவாதத்திற் பிரதான பாகத்தை இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றோம்:

“பண விஷயமான விவாதங்கள் நடக்கும்போது சட்டநிருபணசபைப் பிரதிநிதிகள் உத்தியோக அங்கத்தவரைக் குறை கூறுவதுஞ் சகசமாய்விட்டன; இந்த உத்தியோக அங்கத்தவர்கள் பத்திரிகைகள் வாயிலாகவும் பிரசங்கங்கள் வாயிலாகவுங் கண்டிக்கப்படுகின்றனர்; சிற்சில சமயங்களில் உத்தியோக அங்கத்தவர்களை ஆளாளாகவும் கண்டிக்கின்றார்கள்; இவர்கள்மீது பலவகையான குற்றங்கள் சுமத்தப்படுகின்றன; இச்செய்கையாற் பெரிதும் புண்படுவோர் ஒவ்வொரு பரிபாலனப்பகுதித் தலைமை யுத்தியோகத்தர்களே யாவர்; சில் உத்தியோகத்தரும் கண்டிக்கப்படுகின்றனர்; சனப் பிரதிநிதிகள் இவர்களுடன் ஒத்துழைப்பதை விட்டு மாறுபடுகின்றார்கள்; இதனுல் உத்தியோக அங்கத்தவர்கள் பலமுறையும் சட்டநிருவாகசபையாரின் உதவியை வேண்டி நிற்கவேண்டியவராயினர்.”

இவர்களுடைய கூற்றை நோக்குமிடத்து, சாதாரண மனுஷரிடத்திலுள்ள குறைகள் இந்த டனமூர்ச் சங்கத்தாரை விட்டு நீங்கவில்லை யென்பதும், சாதிமிமானம் தேசாபிமானம் சமயாபிமானம் என்னுமிவைகள் நடுவுநிலைமையைத் தலையெடுக்கவொட்டா வென்பதும் இனிது புலப்படும். இலங்கை வாசிகள் சோடிக்கும் அரசிறைப்பணத்தில் வாழும் இந்த உத்தியோகத்தர்கட்கு, இலங்கை வாசிகளின் பிரதிநிதிகளாயுள்ளார் பணவிஷயமாக ஆராய்ச்சி செய்வதும், வீணர்த்தமான செலவைக் கட்டுப்படுத்துவதும் இஷ்டமில்லையாம் அப்படிச் செய்தல் அவமானமாக விருக்கின்றதாம். அவர்கள் ஆளுவதற்கும் நாம் ஆட்படுதற்கும் பிறந்திருக்கும்போது அச்செயல் உண்மையாக அவமானமாகத்தானே இருக்கும். இலங்கை வாசிகளின் பிரதிநிதிகள்மீது அபவாதஞ் சுமத்திய டனமூர் விசாரணைச்சங்கத்தார் இங்கிலாந்திலிருந்து இங்கே வந்ததும் இலங்கையைச் சுற்றிப் பார்த்ததும் பின்னர் மீண்டதும் இலங்கை வாசிகளின் செலவிற்றான் என்பதை நாம் மறந்துபோக வொண்ணுது. நம்மனோர் காசு சேர்த்துக் குற்றமாக வாங்கியவரை ஒத்திருக்கின்றனர் மேலும் சுயராச்சியத்துக்குரிய சுவாதீனங்களைக் கொடுப்பதாகவும் பெண்களுக்குச் சுதந்திரங் கொடுப்பதாகவும் நம் அரசினர் சொல்லும் இக்காலத்தில், சட்டநிருபணசபைச் சனப்பிரதிநிதிகள் மேலுத்தியோகத்தரோடு பணவிஷயமாகப் பேசவொண்ணு தென்பதும், மேலுத்தியோகத்தர்கள் சனப்பிரதிநிதிகளின் அதிகாரத்திற்கு அதீதராக விருத்தல் வேண்டுமென்பதும் முழு மாறுன நோக்கங்களல்லவா. இப்பொழுது இலங்கையில் நடைபெறும் அரசியன் முறையின் மூலகாரணராகிய ஸேர் வில்லியம் மனிங், அவருக்குப்பின் னிருந்த ஸேர் சிசில் கிளேமென்றி ஆகிய தேசாதிபதிகள் தாங்கள் இலங்கையைப் பரிபாலித்த காலத்தில், சனப் பிரதிநிதிகள் அரசினருடன் ஒத்துழைத்தனரென்று பெரிதும் பாராட்டிச் சொல்லியிருக்கின்றார்களே; கௌரவ மிஸ்டர் ஸினத்துரும் குறித்த விசாரணைச்சங்கத்தார்முன் சாட்சியம் பகர்ந்தபோது சபைப் பிரதிநிதிகளுக்கு மாறுக ஏதுங் கூறியதாகக் காணோமே.

சில தினங்களுக்கு முன்னர்க் கூடிய சட்டநிருபணசபைக்கூட்டத்தில் கௌரவ ஸேர் இராமநாதனவர்கள் மேற்படி விசாரணைச்சங்கத்தார் செயலைக் கண்டித்துப் பின்வருமாறு கூறியிருக்கின்றார்:

“சனப் பிரதிநிதிகள் விஷயமாக டனமூர் சங்கத்தார் கூறிய மூன்று வசனங்களும் முழு அபவாதமானவை யென்றும் கொஞ்சமேனும் உண்மையல்லவென்றும், (இங்கிலாந்திலுள்ள) இலங்கை மந்திரிக்கு நாங்கள் நிச்சயப்படுத்த முடியும். ஆதலினுலே குறித்த விசாரணைச்சங்கத்தார் தாங்கள் அப்படிச் சொன்னமை தவறென்று ஒப்புக்கொள்வதோடு சனப் பிரதிநிதிகளைப் பொறுதியுங் கேட்டல் வேண்டும்; அந்த விசாரணைச் சங்கத்தாரோ வழுத்தவரட சிலர் நியாயவாதிகள்; சனப் பிரதிநிதிகள்மீது யாராயினும் அபவாதஞ் சொன்னால், அபவாதஞ் சொன்னவர்களையும் சொல்லப்பட்ட சனப்பிரதிநிதிகளையும் நேர் நேரில் வைத்து விசாரணை செய்து உண்மையை வெளிவிடுவதல்லாமல், சொல்வார் சொற்கேட்டுச் சனப் பிரதிநிதிகளை அபவாதஞ் சொன்னமை தவறென்பதை மேற்படி சங்கத்தார் உணர வேண்டும். ஆகலால் இந்தவிஷயத்தில் சனப் பிரதிநிதிகளெல்லாரும் ஒரேமனதினராய் இந்த அபவாதத்தை நீக்க முயலுதல் வேண்டும்.”

வட்டுக்கோட்டைப் பயங்கரமான கொலைகள்.

தங்கத்துரை ஐயர் வட்டுக்கோட்டை மேற்கில் தன்குடும்பத்தோடு வாழ்ந்தவர்; இவருடைய முயற்சி வீணை வாசித்தலும் சங்கீதம் பயிற்றுதலுமாம். செப்டெம்பர் மாசம் 27உ வியாழக்கிழமை குறித்த ஐயரின் சகோதரியாகிய சந்தனமமாள், குறித்த ஐயரையும் மனைவி மக்களையும் சில நாட்களாகக் காணவில்லையென்றும், வீட்டுக் கதவு பூட்டப்பட்டிருக்கின்றதென்றும் அததப்பகுதி விதானைக்குத் தெரிவித்தாள். உடனே பொலிஸ் விதானை அந்த வீட்டுக்குச் சென்று ஒரு ஏணி மூலமாக மேலே ஏறிக் கூரையைப் பிரித்துப் பார்த்தபோது ஒருபிரேதம் தூங்குவதைக் கண்டார். விதானை உடனே பொலிஸ்பகுதியாருக்குத்தெரிவிக்க, பொலிஸ் தலைமைஉத்தியோகஸ்தர் [illegible] சில உத்தியோகஸ்தருடன் அங்குச் சென்று பார்த்தபோது தங்கத்துரை ஐயர் தூங்குவதையும், அவருடைய மனைவியும், சிவசம்புஐயர், சோமசுந்தரஐயர் என்னுமிருபிள்ளைகளும் வெட்டுண்டு பிரேதமாகக் கிடப்பதையுங் கண்டார். ஐயர் தன்மனைவிமக்களைக் கொலைசெய்து விட்டுத் தானும் தற்கொலை செய்துவிட்டாரென்றே அதிகாரிகள் அபிப்பிராயப்படலாயினர். பிரேத விசாரணை செய்த டக்டர் சோமசுந்தரம் என்பவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி சமுகத்தில் இவ்விஷயமாகச் சொல்லிய அபிப்பிராயத்தை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டிருக்கின்றோம்

இத்தவிதமான பயங்கர சம்பவம் யாழ்ப்பாணத்தில் இதற்குமுன் எக்காலத்திலும் நிகழவில்லையெனலாம். மகத்துவந்தங்கிய அரசசக்கரவர்த்தியின் பிரசைகள் நால்வர் — வயிற்றிலுள்ள சிசுவுடன் ஐவர் தங்கள் வீட்டிற் பிரேதங்களாய்க் கிடக்கக் காணப்பட்டனர். அதாவது ஒரு குடும்பம் ஒருங்கு மாண்டு போய்விட்டது இந்தச் சம்பவம் குறித்த வட்டுக்கோட்டையி லுள்ளவர்களுக்குமாத்திரமல்ல, யாழ்ப்பாணத்திலுள்ளவர்களெல்லாருக்கும் பெருந்திகிலை விளைக்கின்றது. இது முழுவதுங் கொலையோ, இன்றேல் கொலையோடு சேர்ந்த தற்கொலையோ என்ற சந்தேகம் எவரிடத்தும் பிறக்கின்றது. பிரேதசோதனை செய்த டக்டர் பொலிஸ்நீதிபதிமுன் சொன்ன சாட்சியம் சனங்களின் சந்தேகத்தைக் கூட்டுதற்கு ஏதுவாகவிருக்கின்றதேயன்றிக் குறைக்கும் இயல்புடையதாய்க் காணவில்லை தூங்கிய ஐயருடைய கால்களிலும் கைகளிலுங் காயங்கள் இருக்கின்றனவாம்; நடத்தின் முடிச்சு, கழுத்தின் முற்பக்கத்திலிராமல் இயல்புக்கு மாறாய்ப் பின்பக்கத்திலிருக்கின்றதாம்; 6 பேர்வரையிற் சேர்ந்து ஐயரைப் பலாத்காரமாகப் பிடித்துக் கயிற்றில் மாட்டித் தூக்கிவிட்டுக் கொலை செய்திருத்தலுங் கூடுமோ வென்னுங் கருத்தமையப் பொலிஸ்நீதிபதி டக்டரை வினவியபோது டக்டர் முடியும் முடியாதெனத் திட்டமாகச் சொல்வதைவிடுத்து இதற்குமுன் அப்படி எவரும் எங்கராவது செய்ததாகத் தான் கேள்விப்படவில்லையென்று பதில் சொல்லுகின்றார்; இப்படிப்பட்ட பயங்கரமான கொலைகள் எக்காலத்தில் நடந்ததையும் இதற்குமுன் நமது டக்டர் கேள்விப்பட்டிருக்கமாட்டாரல்லவா? மேலும், காலஞ்சிற் சனங்களியாரும் இது தற்கொலையல்லக் கொலைதான என்று ருசுப்படுத்துவரேல் நீர் எவ்வாறு அபிப்பிராயப்படுவீர் என்று நீதிபதி கேட்டதற்கு டக்டர் கொலையாயும் இருக்கக்கூடும் என்று சொல்லுகிறார்; கொலையோ தற்கொலையோ என்ற கேள்விக்குக் கொலையாகவுமிருக்கும், தற்கொலையாகவு மிருக்கக்கூடும் என்று இரட்டைப் பிடிப்பதற்கு ஒரு டக்டரைக் கேட்கவேண்டுமா? சிறு பிள்ளைகளைக் கேட்டாலும் அவர்கள் இந்த விடை சொல்லுவார்கள்தானே; மாண்ட நால்வரும் இயற்கையாக நோய் வந்து இறந்தனரென்று யாருஞ் சொல்வார்களா? இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர் ஆரியகுளத்தடியில் கனகசபையென்னுமொருவர் குருநாதசுவாமி கோவிலுக்கணித்தாகவுள்ள ஒரு கிணற்றுத் துலாவில் தூங்கியபடி பிரேதமாகக் காணப்பட்டபோது, பிரேதசோதனையில் தற்கொலையென்று அபிப்பிராயஞ் சொன்ன டக்டரும் இவர்தானென்று சொல்லுகின்றனர்; அது மெய்தானு? அந்த வழக்குச் சந்தேகத்தின்பேரில் திரும்ப விசாரணை செய்யப்பட்டுச் சிலர் கடுஞ்சிறைத்தண்டனை யடைந்தமையை யெல்லாரு மறிவர்

இந்தக் கொலைகளிற் சந்தேகப்படவேண்டிய ஏதுக்கள் இன்னுஞ்சிலவுண்டாமே; பூட்டப்பட்ட கதவின் திறப்பு உள்பக்கமாகப் பூட்டில்இருப்பதே இயல்பாக, இது அந்த அறையின் உட்புறத்தில் நிலத்திலே கிடக்கக் காணப்பட்டதாம் அறைக்கு வெளியேயுள்ள விறாந்தையிலும் வாசற்படியிலும் இரத்தக்கறைகள் காணப்பட்டனவாம். வெட்டுண்ட சிறுவன் ஒருவனுடைய தேகத்தில் ஏழு எட்டுக் கத்திக் காயங்கள் காணப்பட்டனவாம். ஒரு தகப்பன் தன் பிள்ளை தன்னைக் கொல்ல வந்தாலும் தான் தப்புதற்கு முயலுவனே யன்றிப் பிள்ளையைக் கொல்லத்தொழிவதே இயல்பாக, சிரப்பிராதிகளான தான் பெற்ற இரு ஆண்குழந்தைகளை வெட்டிக் கொல்லுவனென்பதையும், அவர்கள் ஒரு வெட்டு இருவெட்டில் இறவாதொழிய ஏழு எட்டு முறை வெட்டிக் கொல்லுவனென்பதையும் மனுஷ மனம் ஒத்துக்கொள்ள மறுக்கின்றதே இறந்த மனைவியும் எட்டு ஒன்பது மாசஞ் சென்ற நிறை கர்ப்பிணியாம். இப்படியான சில ஏதுக்களே சனங்களிடத்தில் இக்கொலை விஷயமாகப் பெருஞ் சந்தேகத்தை விளைக்கின்றன இராணமடுக் காட்டிலே மனுஷர் இலகுவிற் செல்ல முடியாத மரச்செறிவில் இன்னுரென மட்டுக்கட்ட முடியாத நிலைமையில் காட்பட்ட ஒருபிரேதம் தூங்கியபடி காணப்பட, அதன் உண்மைகளையெல்லாம் கால நியில் ஆராய்ந்தறிந்து விசாரணை செய்து கொலைப்பாதகர்களுக்கு மரணதண்டனையும் சிறைத் தண்டனையும் விதித்துத் தண்டித்த காருண்ணியம் நிறைந்த நமது அரசினர் இந்தக் குரூரமான, எக்காலத்தும் நடவாத, திகில் விளைக்கிற படுகொலைகள் விஷயத்தில் உண்மையை ஆராய்ந்து சனங்களின் சந்தேகத்தையும் திகிலையும் நீக்குவார்களெனச் சனங்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

நான் ஆங்கிலம்மூன்றாம்வகுப்பிற் சித்தியடைந்துவிட்டமையால் எனது தகப்பனர் என்னை ஒரு சைவக் கல்லூரியில் விடுதி மாணவனுகக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்னும் நோக்கங்கொண்டு ஒரு சுபதினத்தில் என்னை அழைத்துச்சென்று, பட்டினத்திலுள்ள கல்லூரியிற் சேர்த்தனர். எங்கள் வீட்டிற்கும் அந்தக் கல்லூரிக்கு மிடையிலுள்ள தூரம் 9 மைல். கல்லூரியை யடைந்தவுடன் தகப்பனர் அக்கல்லூரியின் பிரதமாசிரியரையும் விடுதிச்சாலையாசிரியரையும் கண்டு, நான் அங்கே மாசவிடுதி மாணவனுய்ப் படித்தற்கான ஒழுங்குகளெல்லாஞ் செய்தார்; எங்கள் கிராமத்தில் வசிக்கும் ஒரு வாலிபனும் அந்தக் கல்லூரியில் மேல்வகுப்பிலே படிப்பதைக் கண்டு என் தகப்பனர் என்னைப் பார்த்துக்கொள்ளும்படியும், மாசந்தோறும் வீட்டிற்கு வரும்போது என்னையும் உடன் அழைத்துவரும்படியும் அந்த வாலிபனிடஞ் சொன்னர் அவனும் அதற்கு மிகவுஞ் சந்தோஷமாக உடன்பட்டான். பெரிய உபாத்தியாயர் ஒரு பையனை என்னுடன் கூட அனுப்பி என் வகுப்பில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும்படி சொல்ல, நானும் கூடிக்கொண்டுபோய் அந்த வகுப்பி லிருந்தேன்; அந்த வகுப்பின் உபாத்தியாயரும் பிள்ளைகளும் என்னை நன்கு வரவேற்றார்கள்; சிறிதுநேரஞ் செல்ல, தகப்பனரும் எனக்குச் சொல்லிவிட்டு வீட்டிற்குப் போவதற்காக அங்கே வந்தார்; “தம்பி, கவனமாகப் படி. உனக்கேதுந் தேவையானல் விடுதிச்சாலை உபாத்தியாயரிடங் கேள், அவர் நல்லவர்; எல்லாம் நான் அவரோடு ஒழுங்கு செய்திருக்கின்றேன்” என்று சொல்லிவிட்டு, “நான் போய்வரட்டுமா” என்று என்னைக் கேட்க, எனக்குக் கண் கலங்கியது; அந்தச்சமையத்தில் நான் அழுதிருப்பேன், ஆனல் வெட்கத்துக் கஞ்சி அழவில்லை; கேட்ட கேள்விக்கு நான் வாயாற் பதில்சொல்ல அப்பொழுதுண்டான விம்மலும் பெருமூச்சும் தடையாக விருந்தமையினுல் நான் ஓம் என்னும் குறிப்புடன் தலையாட்டினேன்; தகப்பனரும் சிறிது முகவாட்டத்தோடு கூடியவராய் என் வகுப்பு உபாத்தியாயருக்குஞ் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

(வரும்.)

குமரேச சதகம். சரு.

நல்லிடஞ் சேரினும் கெட்டவை
நல்லவை யாகாவெனல்.

சிங்கார வனமதி லுதிப்பினும் காகமது
நிஞ்சொல்புகல் குயிலாகுமோ
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மே
செங்கஞ்ச மலராகுமோ [கொட்டி
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
தானைபின் கன்றாகுமோ
வாண்மையா கியநல்ல குடியிற் பிறந்தா
மாடர்பெரி யோராவரோ [அ
சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைகா
சாலக்கி ராம மாமோ [ன்
தடமேவு கடனீரி லேயுப்பு விளைவிலுஞ்
சர்க்கரை யாகுமோ
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞான குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேச னே.

இ-ள். அழகிய பூஞ்சோலையிற் பிறந்தாலும் காக்கையானது இனிய நசைசைச் செய்யும் குயிலாய் விடுதல் முடியுமோ; திரை எறிகின்ற (பெரிய) வாவியிலே அலர்ந்தாலும் கொட்டிப்பூ செந்தாமரைப் பூவாகுமோ; பெரியகாட்டிற் சனித்தாலும் முயற்குட்டி யானைக்கன்றாதல் வடிவுமோ; யோக்கியதையுள்ள குடியிலே பிறந்தாலும் வீணர் பெரியோராய் மதிக்கப்படுவரோ; சங்குகள் சஞ்சரிக்கின்ற பாற்கடலிலே பிறந்தாலும் நத்தை சாலக்கிராமமாகுமோ; பரந்த சமுத்திர நீரில் விளைந்தாலும் உப்பானது இனிமையோடு கூடிய கண்ட சர்க்கரையாகுமோ; (இல்லையென்றபடி); புகழ் குன்றாத குறியவடிவத்தையுடைய அகத்திய முனிவருக்குச் செந்தமிழை அறிவுறுத்திய மெய்ஞ்ஞான குருவே; மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு மலைமேவு குமரேசனே; எ-று.

சாலக்கிராமம்- விஷ்ணு சமயத்தவர்களாற் பூசிக்கப்படும் ஒருவகைச் சிலைக்கல்; இது கடலிற் காணப்படுவது; சாளக்கிராமம் என்றும் வழங்கும்; கண்ட சர்க்கரை-கற்கண்டு; உப்பென்றமையால் உருவ ஒற்றுமைபற்றிக் கண்ட சர்க்கரை யெனச் சர்க்கரைக்குப் பொருள் உரைக்கப்பட்டது.

கால நிலை.

மழையில்லை; சென்ற இரவு தொடக்கம் குளிரோடு கூடிய கடுங்காற்று வீசுகின்றது. ஊரிலே பலவிதநோய்கள் பரவியிருக்கின்றன.

மோட்டோர்ரதம் சிறுவனைக் கொன்றது.

சாரதி கொலையுண்டான்.

சென்ற சனிக்கிழமை காலை சங்கானையில் ஓர் மோட்டோர் ரதம் ஒரு சிறுவனை நெரித்துவிட்டதென்றும், குறித்த ரதத்தின் சாரதி காயப்பட்ட சிறுவனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றவிடத்தில் அங்கு அவன் இறந்துவிட்டதாகவும், பின்பு அவனது பிரேதத்தைப் பெற்றாரிடம் கொண்டுபோய்க் கொடுத்தபோது சிறுவனின் பிதா சாரதியை அடித்துக் கொன்றுவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

புலியும் காக்காவும் மல்யுத்தம்.

பூநகரியைச் சார்ந்த பாலாவியில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன் சற்குளிக்கும் கிழக்கரை இஸ்லாமானவர் ஒருவர் தமது விடுதியிலிருந்து சிறிது தூரத்திலுள்ள தரவுக்குக் குளிக்கும்படி சென்றார் சென்றவர் மலசிமோசனஞ் செய்ய நினைத்துத் தரவுக்கயலேயுள்ள ஒரு எருக்கலம்பற்றை மறைவிற் குந்தியபோது அப்பற்றையுளிருந்த ஒரு புலி புறப்பட்டுப் பாய்ந்துவந்து அவருடைய தலையை முன்னங்கால்களால் இறுகப் பற்றிக்கொண்டது; இஸ்லாமானவர் உடனே புலியோடு மல்லாடத் தொடங்

கிப் புலியைக் கீழே வீழ்த்திவிட்டார்; புலியும் பின்னிடவில்லை; ஒருவாறு அது புரண்டெழுந்து இஸ்லாமானவரைக் கீழே வீழ்த்திவிட்டது; ஆனமட்டோ புலி முட்டோ வென்னை இப்படி இருவருங் கடுஞ்சமராடியபோது இஸ்லாமானவரின் சத்தத்தைக் கேட்டு இன்னுஞ் சில இஸ்லாமானவர்கள் ஆங்குச் செல்லப் புலி, மனுஷர் பக்கத்தில் தொகை கூடியமை கண்டுபோலும் ஓட்டம் பிடித்தது. காயமடைந்த இஸ்லாமானவர் யாழ்ப்பாணம் பொலிஸ் வைத்தியசாலையிற் சிகிச்சை செய்யப்படுகின்றார். அபாயமான காயமொன்றுமில்லையாம்.

வட்டுக்கோட்டைப் பயங்கரமான கொலைகள்.

வட்டுக்கோட்டையிற் சில தினங்களுக்கு முன்னர் ஒரு பிராமண குடும்பத்தில் நிகழ்ந்த கொலைகளிட்டுப் பிரேத சோதனை செய்தவராகிய டக்டர் சோமசுந்தரம் யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிபதி முன்னிலையிற் சொல்லிய சாட்சியம்:—

தூங்கியவருடைய கழுத்தின் பிற்புறத்தில் அதாவது பிடரிமேலதான் கட்டத்தின் முடிச்சுக் காணப்பட்டது. மூச்சுவிடமுட்டாமையினுற்றன் இறந்திருக்க வேண்டும்; வேறு எவ்விதமான நியாயமுஞ் சொல்ல இடமில்லை; தூக்கியபோது அவர் உயிரோடுதான் தூங்கியிருக்கவேண்டும்; கழுத்தைச் சுற்றியும் காதுக்குக்கீழும் பின்னும் நீளமான காயங்கள் காணப்பட்டன. கழுத்திலுள்ள காயங்கள் கழுத்தின் மேற்புறத்தில் நின்றுவிட்டன. வழக்கத்துக்கு மாறானவை ஒன்றுங் காணப்படவில்லை; இறந்தவர் திடகாத்திரமுடையவரும் 5. அடி, 6 அங்குலம் உயரமுடையவருமாவர்.

நீதிபதி:— இறந்தவரைப் பலாத்காரமாய்க் கொலைசெய்ய வேண்டுமானால் எத்தனை பேர் வேண்டும்? 6. பேர் வரையில் வேண்டும்.

நீதிபதி:— 6. பேர் வரையில் இவரைப் பலாத்காரமாகப் பிடித்துக் கயிற்றில் மாட்டித் தூக்கிட்டுக் கொன்றிருக்கக் கூடாதோ? இதற்குமுன் அப்படி யாராவது செய்ததாக நான் கேள்விப்பட்டிருக்கவில்லை. ஆனால் அது அசாத்தியமென்று நினைக்கிறேன்; முழந்தாளிலும் சிற்காலிலும் காயங்கள் காணப்பட்டன. வலதுகை விரல்களில் ஆழமான வெட்டுக் காயங்கள் காணப்பட்டன; இடது கையிலுங் காயங்கள் காணப்பட்டன;

நீதிபதி:— உமது அபிப்பிராயமென்ன? இது கொலையா? தற்கொலையா? இது தற்கொலைதான்.

நீதிபதி:— இனிமேல் யாரும் வெளிப்பட்டு இது கொலைதான் என்று உளவறிந்து சொல்லி அத்தாட்சிப் படுத்துவாராகில், அப்பொழுது உம்முடைய அபிப்பிராயமாக என்ன சொல்லுவீர்? கொலையாகவும் இருத்தல் கூடும்.

மற்றையோர் சொல்லிய சாட்சியம்.

குறித்த தங்கத்துரை ஐயரின் தாயை விசாரணை செய்தபோது சிலநாளாகத் தன் மகன் பொருள் முட்டுப்பாட்டினுல் ஆழ்ந்த யோசனையோடு காணப்பட்டான் என்று கூறினள்.

ஐயரின் சகோதரியாகிய அந்தனம்மாள் தனக்கும் தமயனுக்குமிடையிற் சிலகாலம் மனஸ்தாபமுண்டென்றுந் தனக்கொன்றுந் தெரியாதென்றுங் கூறினள்.

களுத்துறைப் போசன விடுதிச்சாலையில் குடிவகை யில்லை.

களுத்துறையிலுள்ள நகரசங்கத்தில் கூட்டம்நிகழ்ந்தபொழுது அக்டோபர்மீ 1உ தொடக்கம் களுத்துறைப் போசன விடுதிச்சாலையில் குடிவகை கிடைக்க மாட்டாது எனவும், அத்திகதி தொடக்கம் களுத்துறையிலுள்ள தவறணைகளெல்லாம் நிறுத்தப்பட்டுவிடுமெனவும் கருத்துப்பட அரசாங்க உதவி ஏசண்டரால் நகரசங்கத்திற்கு எழுதிய கடிதத்தை, நகரசங்க அக்கிராசனர் எல்லார்க்குங் காண்பித்தனர்.

ஓவசியர் கடலில் அமிழ்ந்தியமை.

பகிரங்க வேலைப்பகுதியில் ஓவசியராக இருந்த உவில்பேட் பெறிரு என்னும் 24 வயதுடைய வாலிபன், சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை, இன்னொரு வாலிபனுடன், அந்த வாலிபனின் இரு சகோதரிமாரோடும் கொழும்பிலுள்ள முகத்துவாரத்திற்கு உலாவச் சென்றிருந்தனன். இரு வாலிபரும் ஸ்நானஞ் செய்தற்குத் தண்ணீர்க்குள் இறங்கினர். இறங்கியவுடன் டெ பெறிருவைக் காணவில்லை. சுளியோடிப்பார்த்தும் அகப்படவில்லை. சில மணித்தியாலங்களுக்குப் பின் அவனது பிரேதம் கண்டெடுக்கப்பட்டது. ஒவ்வொரு வருஷமும் அவ்விடத்தில் ஒவ்வொருவர் இறந்திருக்கிறார்களெனத் தெரிகிறது.

தினவர்த்தமானப் பத்திரிகை.

'சரஸ்வதி'' என்னும் பெயருடன் சுயபாஷையில் ஒரு தினவர்த்தமானப் பத்திரிகை இலங்கை 'மோணிங்லீடர்' கம்பனியாரால் சென்ற திங்கட்கிழமை தொடக்கம் வெளியிடப்படுகின்றது.

கொம்பனித்தெருவில் அமைக்கப்பட்ட புதிய பாடசாலை.

அரசாட்சியாரால் கொழும்பு கொம்பனித்தெருவில், ஆங்கிலமும் சுயபாஷையும் கற்பிப்பதற்காக 250 அடி நீளமும், 40 அடி அகலமும், 1000 பிள்ளைகள் அதற்குளிருந்து கல்வி கற்கக்கூடியதுமான ஒரு பெரிய பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவே கொழும்பிலுள்ள எக்கட்டடத்திலும் பார்க்கப் பெரிதெனலாம். அந்தக் கட்டடம் அதிக நீளமும் அகலமுமாயிருந்த போதிலும், அக்கட்டடத்தைத் தாங்குவதற்கு ஒரு தூணையாவது காண முடியாது. பாடசாலையின் எந்தப்புறத்திலிருந்து பார்த்தாலும், பார்வையைத் தடுக்கக்கூடிய ஒன்றும், பாடசாலையின் உட்புறத்திலில்லை. அதுபோன்ற கட்டடம் பாடசாலைக்கும், பெரிய கூட்டங்கள் நடாத்துவதற்கும் மிகவும் உபயோகமாயிருக்கும். கொழும்பிலுள்ள எல்லாவிடங்களிலும்பார்க்க இக்கட்டடம் அதிகம் சுகத்தைத் தரக்கூடியதாயிருக்கிறது.

பெண் பாதிரி பிடிக்கப்பட்டமை.

சியபின் என்னுமிடத்திற்கு அணித்தாகவுள்ள மலைகளில் தொழில் நடாத்திக்கொண்டு நின்ற ரோசின் என்னும் ஒரு ஆங்கில பெண் பாதிரியைக் கொள்ளைக்காரர் பிடித்துக் கொண்டுபோய்விட்டனர். ஆனால், அப்பெண்பாதிரியோடு கூடச் சென்ற உவாற்கின்ஸ் என்னும் பெண்ணைப் பிடிக்காது விட்டுவிட்டனர். சீன அதிகாரிகளும் ஆங்கில அதிகாரிகளும் அப்பெண்பாதிரியை மீட்டுக்கொள்ள வேண்டும் முயற்சிகளைச் செய்கின்றனர்.

ஆத்துக்குடியில் தண்ணீர்ப்பஞ்சம்.

ஆத்துக்குடியில் தண்ணீர் இல்லாது சனங்கள் கஷ்டப்படுகிறபடியால், செலவில்லாது தமக்குத் தண்ணீருதவும்படி ஆத்துக்குடி நகரசங்க அக்கிராசனர் கொழும்பு நகரசங்கத்திற்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளார். இவ்விஷயம் நகரசங்கக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டபொழுது தண்ணீர் உதவ முடியாதெனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்விஷயம் பின்னரும் மாதவிதம் நிகழும் நகரசங்கக் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்படும்.

வைரங்கள் காணாமற்போய்விட்டன

இரத்தினங்களும் வைரங்களுமாக 2 இலட்ச ரூபா பெறுமதியுள்ள 52 கற்கள் காணாமற்போய்விட்டன. அதைப் பற்றிப் பொலிசர் விசாரணை செய்கின்றனர். அக்கற்கள் சிங்கப்பூரிலிருந்து கொழும்புக்குத் தபால்மூலமாகப் பதிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட 'பார்சலி'லிருந்து களவுபோய்விட்டன. அவைகள் பெல்ஜியம தேசத்துள்ள ஒரு வியாபாரிக்குரியதாகும். அந்த வியாபாரி சிங்கப்பூரிலிருந்து அவைகளை அனுப்பிவிட்டுக் கொழும்பில் வந்து அவைகளைக் கேட்டபொழுது அப்பார்சல் ரேகு அதிகாரிகள் முன்னிலையில் திறக்கப்பட்டது. திறந்து பார்க்கும்பொழுது அந்த விலையுயர்ந்த கற்களைக் காணவில்லை. இதைப் பற்றி விசாரணை செய்யும்படி சிங்கப்பூரிலுள்ள பொலிசருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமாதியிலிருந்து வெளிவந்த ஒரு ஸ்திரீ.

ஜூலை மாதம் 30-ந் தேதி திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு முஸ்லிம்கள், இறந்துபோன ஒருவரை நல்லடக்கம் செய்வதற்கு ஜனாசாவுடன் கபுருஸ்தான் அடக்கஸ்தலம் புறமாய்ச் சென்றபோது அவர்களுள் நால்வர் மட்டும் தனிப்பட்டுக் குழிக்கு வெட்டிய கபுருந்தான் எல்லையை அடைந்தனர். இந்நால்வரில் ஒருவர் பார்வை அகஸ்மாத்தாகப் பொந்தொன்று ஒரு சமாதியின் மேல்பட்டது. அப்பொந்து 1½ சாண் விசாலமாயிருந்தது. அந்தப் பொந்திலிருந்து மனுஷக் கையொன்று அசைந்துகொண்டிருப்பதாகப் புலப்பட்டது. பார்த்தவர் திகைத்திட்டுப்போய்த் தம் தோழர்களை அழைத்து அதைப்பற்றிச் சொல்லவே அவர்கள் முதலில் பரிகாசம் என்று எண்ணினர். ஆனால் சமீபத்தில் வந்து அந்தப் பொந்தை உற்று நோக்கியபோது கையைக் கண்டு பிரமித்துவிட்டனர். சிறிது நேரத்திற்குப் பின் இக் கை உள்ளே இழுக்கப்பட்டு மறைந்தது. இந்நால்வர்களுடைய அதிசய மொழிகளைக் கேட்டுப் பின்னால் வந்துகொண்டிருந்த அனைவரும் அங்கு வந்து கூடிவிட்டார்கள். சமாதி வெட்டுபவனை அழைத்து அந்தச் சமாதியை வெட்டிப் பிரிக்கும்படி சொல்லப்பட்டது. அவன் கொஞ்சம் வெட்டிப் பிரிப்பதற்குள் பயந்தோட ஆரம்பித்தான். எனினும் ஜனங்கள் அவனுக்குப் பலவாறு தைரியங் கூறி மீண்டும் வெட்டும்படி செய்தனர். சமாதி போதியளவிற்குப் பிரிக்கப்பட்டதும் இரண்டு தைரியசாலிகள் அதனுள் இறங்கினர். தற்செயலாக அந்தச் சமாதி பக்கத்திலுள்ள சமாதியுடன் சேர்ந்து உட்புறத்தில் விசாலமாயிருந்தது. அடர்ந்த இருளில் உற்றுப் பார்த்தபோது அங்கு பதுங்கியிருக்கும் ஒரு மனிதனுக்குரிய நடமாட்டம் தோன்றியது. அப்பால் இருவரும் நெருங்கிப் போய்ப் பதுங்கியிருந்தவனது இரு புஜங்களிலும் தங்கள் கைகளைக் கொடுத்துத் தூக்கியபோது ஜனங்கள் அடைந்த ஆச்சரியத்திற்களவில்லை. தூக்கப்பட்டவள் ஒரு ஸ்திரீ. அவள் தேகத்தின் பேரில் ஓர் போர்வையிருந்தது. மேலே வந்ததும் அந்த ஸ்திரீ தன்முகத்தைப் போர்வையால் மறைத்துக் கொண்டாள். அவளது முகம் பயங்கரத் தோற்றமுடையதாக விருந்தது. பொலீசாருக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது. அந்த ஸ்திரீ லாகூரைச் சேர்ந்த 'சோகரா' என்ற ஊரில் உள்ளவளென்றும், அவள் ரஜபுத்திர முஸ்லிம் என்றும் அவளுடைய கணவன் இரண்டாவது விவாகம்செய்து கொண்டானென்றும் சில தினங்களுக்கு முன் அந்த ஸ்திரீக்குப் பாம்பு தீண்டியதிலிருந்து அவளுடைய மூளை கெட்டுப்போய் அவள் பித்துக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்பி விட்டாளென்றும் ஆராய்ச்சியினின்றும் தெரிந்து கொள்ளப் பட்டிருக்கிறது. தற்காலம் அந்த ஸ்திரீ கிலாபத் சங்கத்தலைவர் ஜனுப் தாஜுதீன் ஆதரவில் வைக்கப்பட்டிருக்கிறாள்.

—"தமிழ்நேசன்"

107 வயதுடைய ஒருவரின் நோயற்ற வாழ்வு.

திருக்கோணமலையைச்சார்ந்த மூதூரில் இதற்குமுன் எக்காலமும் இல்லாதவண்ணம் மகமதிய குலத்திலுற்ற அசனுலவ்வை மரக்காயர் முகம்மதுலவ்வையென்பொருவர் 107 வயதிற்கிருக்கிறார். அவரது சீவியத்தைப் பற்றி வினவும் நேரம் அவர் சொல்லுவதாவது: தனது சீவியத்தில் நோயென்பது தன்னைப் பிடித்தது குறைவென்றும் தனக்குப் 16-வது வயது நடக்கும்போது முதல் விவாகஞ் செய்தாரென்றும் இதற்கிடையில் தான் செய்துகொண்ட விவாகம் 13 என்றும் தன் சீவியத்திற் செய்த கொடுமைகளுக்குக் கணக்கில்லையென்றுங் கூறுகின்றார். இன்னுந் தான் செய்த கொடுமைகள் மிகவாகையால் தான் அவற்றிற்காகத் தவஞ்செய்து பொறுத்தல் அடைய வேண்டுமென்பது கருதிப் போலும் இத்துணைக்காலந்தீர்த்துத் தன்னைக் கடவுள் வாழவிட்டிருக்கின்றாரென்கின்றார். இம்முதியோர் தம் 101-ம் பிராயத்திலே 13-வது விவாகஞ் செய்தார். கடவுள் கிருபையால் அவ்வாழ்க்கைக்கு மோர்பாலனுதித்து இப்போது அப்பையனுக்கு 5 வயதாகின்றது. இவரது புத்திரசந்தானத் தொகையை இவ்வளவென்றுகணக்குப்பதிய முடியாதிருக்கின்றது. ஏனெனில் பல நாடுகளிலும் விவாகஞ் செய்தபடியினாற்றன். அன்னவரை இதைப்பற்றி உசாவிடில் துக்கப்படுகின்றதேயன்றிப் பதில் சொல்லுபவராய்க் காணவில்லை. இன்னுந் தான் குடித்தன வாழ்க்கையை நடத்தவும் பிழைப்புச் செய்யவும் போதிய பெலன் இருப்பதாகவுங் கூறுகின்றார். இவரது பற்கள் தேய்ந்து போய்த் திரும்பவும் முளைக்கின்றன. இறைச்சி வகைகள் உண்பதற்கு யாதுங் கஷ்டமில்லையென்பதாகவுஞ் சொல்லுகின்றார். கண்பார்வையுங் காதுகேட்புந்தான் சிறிது குறைந்திருக்கின்றனவெனவும் புகலுகின்றார். ஆயினுஞ் சீக்கிரத்தில் அக்குறைகள் யாவும் நீங்கிச் சொஸ்தமடைவேனென்றுஞ் சொல்லுகின்றார். இவரது சீவியத்திற் புரிந்துவந்த முயற்சிகளோவெனில் மாந்திரிகம், வைத்தியம், கன்றுத்தொழில் முதலியனவேயாம். இவரது சொந்தவூர் திருக்கோணமலையிலிருந்து ஏழுமைல் தூரத்திலுள்ள நிலாவெளி என்னும் சிற்றூராம். இம்முதியோர் தம் பாலிய பிராயத்திற் கண்ட புதினங்களை எடுத்துரைத்தோதி எம்மை மகிழ்விக்க இன்னும் அனேக ஆண்டுகளுக்கு எங்கள்முன்பாய்ச் சீவிக்க வேண்டுமெனுமாவல் கொண்டு கடவுளைப் பிரார்த்திக்கின்றேம்.

M. திருச்செல்வம்.

பெரிய ஊமாண்டி.

இக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய ஊமாண்டி உலாவித் திரிகிறது. தற்காலத்தில் தத்தஞ் சாதியாரால் புறக்கணிக்கப்பட்ட சிலர் ஒருங்கு சேர்ந்துகொண்டு நாம் ஒடுக்கப்படுகிறோமென்று கூட்டங்கள் கூடிப் பத்திரிகைக் கெழுதி ஆரவாரம்பண்ணித் திரிகின்றனர். இவர்களுடைய ஆரவாரத்தைக் கேட்கிற மறுதேசத்தவர் யாழ்ப்பாணத்தில் இன்னும் அடிமை வியாபாரம் நடைபெறுகிறதென்று நினைக்கின்றனர். யாழ்ப்பாணத்தின் தற்காலநிலையைப் பார்த்தால் இவர்கள் சொல்லுகிற ஒடுக்குதலென்பது குழந்தைப்பிள்ளைகளைப் பயப்படுத்துகிற ஊமாண்டியேயல்லாமல் வேறல்லவென்று காணலாம். முற்காலத்திற் பாதிரிமாரிடம் உத்தியோகம்பெற விரும்பிய சிலர், தாம் கிறிஸ்தவராயிருந்தமையால் வீடுவிட்டுத் துரத்தப்பட்டோமென்று பாதிரிமாரிடம் அடைக்கலம்போக, அவர்களுக்கு ஒத்தாசையாய் வீட்டுக்காரரும் பாதிரியாரிடம்போய் இந்தக் கள்ளப்பயல் வேதக்காரனாய்விட்டான். இனிக் கண்ணிலே முழிக்கப்படாதென்று முறையிட்டு வந்தசெய்தி பலருக்குந் தெரியும். இப்படி முன்னுள்ளோர் பாதிரிமாரை யேய்ப்பி உத்தியோகம் வாங்கினமாதிரியாய், ஒடுக்கப்படுகிறோமென மாரடிப்போரும் அரசினரையும் பிறதேசத்தாரையு மேய்ப்பி அவர்களுடைய அனுதாபத்தையும் உதவியையும் பெற்றுக்கொள்ளப் பார்க்கின்றனர். இவர்களுடைய நோக்கம் இம்மட்டோடு நிற்கவில்லை; வாலறுந்த நரி தான் மற்ற நரிகளாற் புறக்கணிக்கப்பட்டமைக்காக மற்ற நரிகளின் வால்களையு மறுப்பிக்கப் பார்த்ததுபோல இப்பேர்வழிகளும் தத்தஞ்சாதியிலுள்ள மற்றோரையும் அவர்களுடைய ஆசாரங்களிலிருந்து நீக்கித் தம்மைப்போலாக்கவும், தாம் அவர்களுக்குத் தலைவர்களாய் வரவும் இதுவே நல்ல உபாயமென்று மேல்சாதியார் நம்மை ஒடுக்குகின்றனரென்று ஊமாண்டி காட்டுகின்றனர்.

ஒரு தேசத்திலுள்ள எல்லா அவயவங்களும் ஒரே தொழிலைச் செய்தால் தேசத்தின்பாடு எப்படியாகுமென்பதை யுணர்ந்த முன்னோர் ஒவ்வொரு தொழிலையுஞ் செய்வதற்கு ஒவ்வொரு பகுப்பினரை நியமித்துவைத்தனர். அவ்வாறு பகுக்கப்பட்ட பகுப்புகள் ஒன்றிற்கொன்று சமமானவையாயினும், தன்தொழிலைவிட்டவன் சாதியிற் கெட்டவன் என்னும் விதியைக் கைப்பற்றித் தம் சாதியொழுக்கங்களினின்று தவறினோரைக் கீழ்சாதிகளாய் மதித்துவருகின்றனர். இவ்விதமே வேளாளர் தமக்குள் நெறி தப்பினோரைப் பரதேசிகளென்றும், கோவியர் தமக்குள் விலகிப்போனோரை இடம்போன வடுகரென்றும் நினைக்கின்றனர். பறையர் பள்ளரும் தமக்குள் ஆசாரமற்றவர்களைத் தம் சபைசந்திகளிற் சேர்க்கிறதில்லை. இப்படி ஆசாரத்தினின்று விலகினோரையன்றி மற்றையோரைத் தாழ்ந்தசாதியாரென எவரும் அவமதிக்கார்.

தற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் என்ன ஒடுக்கமிருக்கிறது. சனங்கள் பலதிறப்பட்ட சாதிப்பெயர்களாலறியப்படுவதும் பல வித்தியாசமான தொழில்களைப் புரிவதும் ஒடுக்குதலென்று சொல்லலாமா? ஒருவன் தன் சாதிப்பெயரை மாற்றி நான் வேளாளனென்றால் அல்லது தன் சாதிக்குரிய தொழிலைச் செய்ய மறுத்தால் யாருமவனை உபத்திரவப்படுத்துகிறார்களா? பெரிய மாடமாளிகைகளைக் கட்ட அல்லது குசாலா புடிக்க அல்லது ஆடம்பரமாய்ப் பவனிபோக எவருக்காவது கஷ்டமிருக்கிறதா? இப்படி யாவரு மெல்லாச்சலாக்கியங்களையு மனுபவிக்க இடமிருக்கும்போது ஒடுக்குதலென்பது என்ன? வேளாளருடைய வீட்டுக்குள் நுழையவும் அவர்களுக்குள் விவாகஞ் செய்யவும் முடியாதிருப்பதுதான் ஒடுக்குதலென்று சொல்லுகிறார்களாக்கும். ஒருவன் சில வேளை தன் சாதியாரையும் தன் வீட்டுக்குள் விடுகிறானில்லையே. தன்னோடு சம அந்தஸ்து இல்லாதவன் தன் சொந்த இனத்தவனாயிருந்தாலும் அவனுக்குத் தன் பிள்ளையை விவாகஞ் செய்து கொடுக்க மறுக்கிறனே, ஆகலான் இது சாதிபற்றிய ஒடுக்குதலல்ல. கோவில் கும்பிட இடமில்லாத ஒடுக்குதலா? ஒவ்வொரு பகுப்பார்க்குங் கோவில்களிருக்கின்றனவே. கோவில்கள் பலவாயினும் தெய்வம் ஒன்றுதானே. நளவன் தன் ஆசாரப்படி நடத்துங் கோவிலில் வேளாளன் போய் அவனுடைய ஆசாரத்தைக் கெடுக்கப்போகின்றானா? அப்படியல்லாதிருக்கும்போது வேளாளன் தன் ஆசாரப்படி நடத்துங் கோவிலில் நளவன் புகுந்து அவனுடைய ஆசாரத்தைக் கெடுக்கப் பார்க்கலாமா? சைவக் கோவில்களெல்லாம் அவைகட்கேற்ற ஆசாரப்படி நடத்தப்படவேண்டியிருக்கின்றன. அவற்றிற்குரிய ஆசாரத்தை முறைப்படி யனுசரிப்பது ஒடுக்குதலா?

ஒடுக்கப்படுகிறோமென்போர் தமக்குப் புறம்பான பாடசாலைகள் வேண்டாமென்பதன் கருத்தென்ன? வேளாளருடைய தோளில் ஏறிக்கொள்ளாவிட்டாற் படிப்பு வராதா? தமக்கெனப் புறம்பான பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டால் அவைகளுக்கு உதவிச்சம்பளங் கொடுக்கப்படாதென்று இவர்கள் அரசினருக்குக் கட்டளையிடத் துணிந்துகொண்டனர். இப்படிக் கட்டளை பண்ணுவோர் யார்? யாழ்ப்பாணத்திலுள்ள ஆயிரக்கணக்கான நளவர் பள்ளர் பறையர் இப்படிக் கேட்கவில்லை. தங்களுக்கெனப் புறம்பான பாடசாலைகள் இருந்தால் தம்பிள்ளைகள் கல்வியில் விசேட தேர்ச்சியடைவரென்று நினைத்து அவர்கள் அவ்வித பாடசாலைகளாக்கப்படவேண்டுமென வாஞ்சிக்கின்றனர். அப்படியிருக்க அவர்களாற் புறக்கணிக்கப்பட்ட சிலர் அவர்களுக்காக நியாயம் பேசுகிறோமென்று சொல்லி அவர்களைக் கெடுக்கப் பார்க்கின்றனர். இவர்கள் தாம் பெருமையடைவதற்காக யாழ்ப்பாணத்தவர் யாவருக்கு மிழிவை உண்டாக்குவதும் மற்றப் பகைகளை மூட்டிவிடுவதுஞ் சரியல்ல. எவராவது கல்வி செல்வம் முதலியவற்றில் முன்னேறுவதற்கு இப்போது இங்கே ஒருதடையுமில்லை. ஊமாண்டி காட்டும் பேர்வழிகள் இனிமேலாவது யாழ்ப்பாணத்தவரிற் களங்கமுண்டாக்கும் இவ்வகை பிரிவினைகளை மூட்டிவிடாமல் யாவரும் உண்மையான முன்னேற்றமடைய உதவிபுரியும்படி யவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
பொதுசனப்பிரியன்.

க்ஷயரோகவியாதி பரம்பவிடாமல் தடுக்கும் வழி வகை.

பதிவுகாரியஸ் தலைவரின் றிப்போர்ட்டின்படி சென்ற நான்கு வருஷகாலத்தில் இத்தீவில் 5232-க்குக் குறையாத மரணங்கள் க்ஷயரோக வியாதியினால் நேரிட்டன வென்பதாகக் காட்டுகின்றன. இவ்வியாதி பரம்பியிருக்குந் தொகையை மதிப்பிடுவதற்கு ஒரு பொதுவான பிரமாணம் ஒவ்வொரு மரணத்திற்கும் பத்து நோயாளிகள் வீதமாகக் கணக்கிடுவதேயாம். இம்மதிப்பை சரியென்று நினைத்து ஒவ்வொரு மரணத்திற்கும் பத்து நோயாளிகள் வீதம் கணக்கிடுவோமானால் 1920-ம் ஆண்டிற்கு முந்திய நான்கு வருஷங்களிலும் இவ்வியாதியால் பீடிக்கப்பட்ட பேர்களின் தொகை 26150 என்று காண்கிறோம். இது வரையும் நிவர்த்திசெய்யத்தக்க தொகையாய் இருக்கிறது.

பெருந்தொகையான ஜீவமோசமும் சனசமூக கஷ்டமும் எப்படியுண்டாகிறதென்பது இதனால் வெளிப்படையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகவியாதிக்கு மகாபெரிய வெண்கொள்ளைநோய் (The Great White Plague) என்று சரியான பேர் கொடுத்திருக்கிறார்கள். க்ஷயரோகவியாதி தொற்றுவண்ணம் தடுக்கப்படக்கூடிய ஒரு நோய் என்று (Profes or Osler) என்னும் வித்துவான் நெருப்புக்காய்ச்சலைப்பற்றிக் கூறியதுபோல நாங்கள் க்ஷயரோகவியாதியைப்பற்றியும் கூறலாம். அதாவது சனங்களின் சௌக்கிய ஆசார அறிவு எவ்வளவுக்குக் குறைவாக இருக்கிறதோ அவ்வளவுக்கு நெருப்புக்காய்ச்சலும் அதிகரிக்குமென்பதே. தற்போது உன்னத நிலையில் இருக்கும் சனசமூக சௌக்கியதார நிலையினுதவியினால் இந்நோய் பரவுதலை மிகவுங் குறைக்கலாம்.

க்ஷயரோகம் ஒருவரிலிருந்து இன்னொருவருக்குத் தொற்றக்கூடியநோய். இந்நோய் தொற்றுகிறதற்கு ஓர் வகுப்பைச் சேர்ந்த ரோகபீசம் அல்லது நோயணுவே ஏதுவாய் இருக்கின்றது. இந்த ரோகபீசத்திற்கு கொக் (Coch) என்பவர் க்ஷயரோக பீசம் என்று பெயரிட்டிருக்கிறார்.

க்ஷயரோகம் குடல், மூளை, மூத்திராசயம் கழுத்திலுள்ள மிசண்டம், இடுப்பெலும்பு போன்ற எலும்புகள் ஆகிய உடலபின் அநேக பாகங்களைத் தாக்குகின்றது. ஆனால் சுவாசப்பையைத் தாக்கும்பொழுது அந்த ரோகத்தை சயம் (Consumption) என்று சொல்வார்கள். இந்நோயினால் வருந்துபவர்களின் மலசலக்கழிவுகள் சளிகளில் க்ஷயரோகபீசங் காணப்படும். பிரதானமாக இச்செந்துக்கள் க்ஷயரோகவியாதியை உடையவருடைய சளி அல்லது துப்பலிலேயே காணப்படுகின்றன.

இன்றுதொடக்கமாகக் க்ஷயரோகவியாதி பரவாமல் தடைசெய்யக்கூடிய வழிவகைகள் ஒழுக்குகள் சுகாதாரமுறைகளைப் பற்றி கமதங்கள் தொடர்பாக வெளிவரும். நீயும் உன்னுடைய குடும்பத்தாரும் க்ஷயரோகவியாதி பரம்பவிடாமல் தடுக்கும் வழிவகைகளைப் படித்து அறிந்துகொள்ளவேண்டும். க்ஷயரோகவியாதி பொதுவான நிலைமையில் உள்ளவர்கள் இலகுவில் உபயோகிக்கக்கூடிய வழிவகைகளால் தடுக்கக்கூடியதாய் இருக்கிறது. 'பலதுளி பெருவெள்ளம்' என்றதுபோல நீங்கள் ஒவ்வொருவரும் செய்யும் முயற்சியின் இக்காரியத்தில் உதவுவனவாயிருக்கும். அதிகாரிகளுக்கு உன்னால் கூடியளவு உதவிசெய்வது நீ உனக்கும் உன்னைச்சேர்ந்த சனசமூகத்திற்கும் செய்யுங்கடனாம். ஆகும் உங்கள் ஒவ்வொருவருடைய கடமையும் அவசியத் தேவையாய் இருக்கிறது.

உலகத்தவர் நலம் உன் நலம்.

க்ஷயரோகவியாதியைத் தடுக்க முயற்சி செய்யும் கூட்டத்தார் இந்நோயைத் தடுக்கத் தம்மால் கூடியமட்டும் முயற்சிசெய்து வருகிறார்கள். உன்னுடைய உதவியைக்கொண்டுதான் அவர்கள் வெற்றிபெறவேண்டும். ஆனபடியால் நீயும் உன் கடமையைச் சரியாகச் செய்வாயாக.

1. இந்நோய்க்கும் அதன் பெருகுதலுக்கும் 2 தொற்றும் இயல்பிற்கும் காரணமாய் உள்ளது இந்த க்ஷயரோகபீஜமானபடியால் இந்நோயைத் தடுக்கக்கூடிய வழிவகைகள் மூன்றுண்டு. அவையாவன:—

1. தொற்றவிடாமல் பாதுகாத்தல்
2. தொற்றிவிட்டால் நோய் தன் தொழிலைச் செய்யவிடாமல் தடைபண்ணுதல்
3. தன் முழு உக்கிரத்தையும் காட்டவிடாமல் தடைபண்ணுதல் ஆகிய இவைகளாம்

இதற்கு மாறாக இவ்வியாதி அதிகரித்த பின் மாத்திரம் பிரதிகொண்டிட்டால் அதைத் தடுக்க வேண்டிய வழிவகைகளைத் தேடவேண்டின் தடுக்க முடியாது போய்விட்டால் அதினால் உண்டாகும் வேதனையைக் குறைக்கக் கூடியளவு குறைத்துக் கொள்வதற்கென்று முயலவேண்டும்.

நாகரீகத்தரமான சனசமூகத்தாரில் இத்தொற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் நூற்றுக்கு 75 தொடக்கம் 90 வரைக்குமான பெருந்தொகையானோர் என்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்நோய் எப்படித் தொற்றுகிறதென்று அறிந்திருக்கிறபடியால் காலதாமதந் தடுக்கக்கூடிய திட்டமான வழிவகைகளைச் செய்துகொள்ளலாம். நோய் தொடர் தன்மை எவ்வளவுக்குக் குறைகிறதோ அவ்வளவுக்கு மரணவிகிதமும் குறையும். மேலே சொல்லப்பட்ட நூற்றுக்கு 90 விகிதமானோரில் இரண்டிலும் மூன்றிலும் பெரிய நோய் சரியாகப் பிடிக்க [illegible] பிடிவாதமாக இந்நோய் எப்படி வருத்துகிறதென்பது மனிதருக்குத் தெரியாததனால் [illegible] அதைத் தடுக்க முயற்சி செய்யப்படவும் செய்யவும் வல்லமையாக இருக்கும்.

இப்பொழுது இருக்கிறபடிக்கு இந்த 100 பேர்களில் 8 பேருக்கும் 10 பேருக்கும் இடையில் க்ஷயரோகவியாதியால் இறப்பது நிசம். நோய் தொற்றுவண்ணம் தடுக்க இயலவிட்டாலும் எங்களால் கூடியளவு முயற்சிசெய்தால் ஓர் தொகையானோர் அகாலமரணமடைவதைக் கூடியளவு தடுக்க முடியும்.

க்ஷயரோகத்தைத் தடுக்கிறதற்கு நாங்கள் கவனிக்க வேண்டியவைகள்:—

1. சனங்களுக்குரிய சுகாதாரமுறைகள் இது சனசமூகத்தார் சுகாதாரப்பிரகாரமாகச் சீவிப்பதற்காக வேண்டிய எல்லா ஏதுகரங்களையும் அடைந்துகொள்ளும்படி நாங்கள் செய்யும் எத்தனங்களைக் குறித்ததாய் இருக்கிறது.
2. ஒவ்வொருவரும் தனித்தனியே கவனிக்க வேண்டிய சுகாதார முறைகள் சீவியம் நடத்துவதிற் சரியான முறைகளைப் பின்பற்றுவதற்கான எத்தனங்கள்
3. கடைசியாக ஒவ்வொருவரும் தன் தன் காரியங்களைக் கைக்கொள்ளவேண்டிய சுகாதாரமுறைகள் இவை மூன்று பிரதான பிரிவுகளாக விரியும். அவையாவன: சுபழக்கமும் சரீரசுத்தமும் வீட்டுப் பழக்க வழக்கங்கள் சாப்பாட்டுப் பழக்க வழக்கங்கள் என்பனவே

விசேஷ விபரங்களும் புத்தகங்களும் அறிந்துகொள்ள விரும்புவோர் கொழும்பிலிருக்கும் க்ஷயரோக வைத்தியசாலைக்கு எழுதி அறிந்துகொள்ள வேண்டும்.

இலக்கம் 12.

அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

மலேரியாப் பிரசினத்தைப் பற்றியுள்ள சில தன்மைகள்.

(முற்றொடர் ,

இளம்வயதுக்காரரில் அதாவது 12 வயதுக்குட்பட்டவர்களில் வயது முதிர்ந்தவர்களிலும் பார்க்க மலேரியாக் காய்ச்சலின் பிரசன்னம் (மண்ணீரல் பெருத்து இருத்தல்) பெரும்பான்மையாய்க் காணப்படும். மற்றும் மேலே சொல்லப்பட்ட காலங்களில் புவனசாஸ்திரத்தொடர்த்த ஸ்தானந்தான் மிகவும் முக்கியமுள்ளது. இதைப்பற்றி விபரமாய் இங்கு சொல்லப்படும். மனிதசஞ்சாரம், கொண்டாட்டம், சம்பாஷணை முதலிய சடுதியாய் சேரும் வழிவகைகளாலும், நோய் தொற்றியிருக்கும் இடங்களில் அறியாத்தனமாய்ச்சென்று பல தொழில்களைச் செய்வதினாலும் நெருப்புக் காய்ச்சல், பேதி முதலியநோய்கள் உண்டுபட்டுப் பரவுதல்போல ஒரு குறித்த வகுப்பைச் சேர்ந்த பெண் நுளம்புக் கூட்டங்கள் மனிதசஞ்சாரத்தை விடாமல் தொடர்ந்து திரிவதால் மலேரியாக் கிருமிகள் தொற்றிப் பெருகும். மலேரியாக் கிருமிகள் பெருகி இடையூறுகள் செய்வதை, மனிதன் தன்னைச் சுற்றவர இருக்கும் இடம் பொருள் ஏவல் இவைகளின் இசைவுக்குத் தக்கபடி வசதிபண்ணி வாசஞ் செய்துகொண்டு வருவதால் குறைத்துக் கொள்ளலாம். ஆனால் இத்தன்மை செய்கை சில சன்னல் பின்னல்களையும் முன்படுத்திவிடுகிறது. பற்றிப்பிடிக்கத்தக்க நுளம்புச்சாதி தாங்கள் குஞ்சுபொரிக்கு மிடத்திற்கும் இரத்தங் குடிக்க வசதியாயுள்ள வீடு வாசல்களுக்குள்ள இடத்திற்குமுள்ள சமீபந்தான் அவ்விடத்திற் குடியிருக்கிறவர்களுக்கு மலேரியாக் காய்ச்சல் கடுமையாய் உண்டாகிறதற்கு ஏதுவுள்ளதாயிருக்கிறது. சமீபம், அல்லது புவனசாஸ்திரத்தொடர்த்த ஸ்தானம் (1) பெருந்தொகையான "அநோபிலியா" நுளம்புகள் வீடுவாசல்களுக்குக் கிட்ட வாசஞ்செய்கிறதற்கு உதவியாயிருக்கிறது, (2) மலேரியாக் கிருமி காலபரிவிருத்தி அடைய உதவிபண்ணும் பெண் நுளம்புகள் முட்டைகளிடப் பறக்கத் திரும்பும்பொழுது மோசத்துறைகளில் விழாமலிருக்கவும் பத்திரமாய்த் தாங்கள் வாசஞ் செய்யுமிடத்திற்குத் திரும்பிப்போகவும் உதவியாயிருக்கிறது, (3) நுளம்புகள் கூடுமானவரை வசதியான இடங்களைத் தங்கள் பாவிப்புக்குப் பிடித்துக்கொள்ளவும் உதவியாயிருக்கிறது. இப்படியான சமாசாரம், இந்நோய்க்கு மேற்சொல்லப்பட்டவிதமாய் ஆளாகிறவர்களை எந்தவிடத்தில் அல்லது எந்தத்தெருவில் இருந்தார்களென்றும், அங்கு எவ்வளவுகாலமாய் வாசஞ்செய்தார்களென்றும், மலேரியாசம்பந்தமுள்ள விசாரணைகள் நடத்தும்பொழுது கட்டாயமாய்க் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும்.

சகிப்பு அல்லது மலேரியாக் காய்ச்சலின்மையாயிருத்தல்.

மனிதனில் தற்பாதுகாத்துக்கொள்ளும் யந்திரபந்தம் மிகவும் சிக்குமுக்கானது. அவனுடைய தேகத்தில் அல்லது இரத்தத்தில் எப்படிப்பட்ட அந்நியமான பகைவர் உட்சென்றாலும் அவனுக்கு அவைகளால் மோசம் நேரிடாமல் பாதுகாக்கிறதற்கு யந்திரபந்தம் இயற்கையாய் ஏற்பட்டிருக்கிறதைக்காணலாம். பகைவர் முற்றுமுழுதாய்த் தன்னை வெல்லவிடாமல் மேற்சொல்லப்பட்டவிதமாய்த் தற்பாதுகாக்கப்படும்பொழுது வேறும் உபாயங்கள் இப்படிப்பட்ட அபாயங்கள் நேரிடவிடாமற் பார்த்துக் கொள்ளப்படுகிறதற்கும், நடந்திருக்கும் காரியங்களைக் கவனித்து அதற்குத்தக்க விதமாய் நடந்துகொள்ளவும் இருக்கின்றன. இவைகளில் முதற்சொல்லப்பட்ட அரோகயத்தின்மை என்றும் மற்றதைச் சகிப்பு என்றும் சொல்லப்படுகிறது. மலேரியாக்காய்ச்சலுண்டுபட்ட அநேகருக்குச் சரியான வைத்தியஞ் செய்வித்தாற் கொஞ்சக் காலத்தால் மலேரியாக் கிருமிகளினுண்டுபடும் சஞ்சலங்களை நியாயமாய்ச் சகித்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட சுகமடைய (1) கெடுதியான உணவுகள், (2) மிதமிஞ்சிய ஆயாசம், (3) குளிர் பிடிக்க இடங்கொடுத்தல், (4) தத்துவக் கேட்டை உண்டுபண்ணும் இடைவிட்டுவரும் நோய்கள் முதலியவற்றை விலக்கிக்கொள்ளவேண்டும். சாதாரணமான ஒருவனுக்கு மலேரியாக் காய்ச்சல் உண்டுபட்டால் அது சுறுக்கில் மாறிவிடும். ஆனால் அவன் தன்னை மறுபடியும் நோய் அணுகாமல் பவித்திரப்பண்ணிக் கொள்ளாவிட்டால் இக் காய்ச்சல் மறுதலிக்கும். ஆபிரிக்காவின் சில பாகங்களிலும், நியூகயனா தேசத்திலும் (New guinea) இன்னும் வேறுசில தேசங்களிலுமிருக்கும் சுயதேசவாசிகள் முற்றுமுழுதாய் மலேரியாக் காய்ச்சலுண்டுபட்டாலும் சகித்துக்கொள்ளும் சக்தியுடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் சுயதேச வாசிகள் இக்காய்ச்சலால் வருந்தாதிருந்தாலும் அங்கு புதிதாய் வருபவர்கள் இந்நோய்க்கு ஆளாகிவிடுகிறார்கள். அவைகளுக்கு மிகக் கெதியில் நோய் தொற்றி மிகவும் வருந்துவார்கள். ஒருபக்கம் நோய் தொற்றும் தன்மைகள் குறைவாயிருந்தாலும் மற்றப்பக்கம் அதிகமாயிருந்தாலும் அந்த அரசாட்சிக்குட்பட்ட ஜனங்கள் சகித்துக்கொள்ளக் கூடியவர்களாயிருக்கிறபடியினால் மலேரியாக் காய்ச்சல் நோய் பிடித்திருந்தாலும் வாதைப்படாமலிருப்பார்கள் என்பதை மறந்துபோகக் கூடாது. இயற்கையாய் மலேரியாக் காய்ச்சலின்மையாய் ஒருவரிருத்தல் அரிது. ஆனால் மேலே சொல்லப்பட்டவிதமாய் நடந்துகொண்டால் காய்ச்சலின்மையாயிருக்கலாமென்பதை போதிய அத்தாட்சிகளிருக்கின்றன. ஒருவனுக்கு நோய் பிடிக்கும்பொழுதொழிய மற்றும்படி பிறந்தகாலத்திலிருந்தே அதிகப்படியான சர்வவியாபகஉணர்ச்சி இருக்கும். ஆனபடியால் அளவுகடந்த ஊக்கம் எடுத்துக்கொள்ளும்படியாலும் முன்கொண்ட எண்ணங்களில்லாமலும் போதியளவு நுட்பவிசாரணைக்குப்பின்பு சந்ததியைத் தாக்கி வதிக்கவேண்டுமென்னும் மலேரியாச் சம்பந்தமுள்ள பிரசினத்தை அவிழ்க்கும் கொடி வெளிப்படையாகிறது.

இத்தகையதீர்மானங்கள்தான் யாவா(Java) தேசத்திலுள்ள பிரதம சுகாதார தலைவரால் இப்போ கொஞ்சக் காலத்துக்கு முன் செய்யப்பட்டிருக்கிறது. அவர் 1920-ம் ஆண்டு ஒல்லாந்த கிழக்கு இந்தியாவில் (Dutch East Indies) பிரசுரஞ் செய்யப்பட்ட சுகாதார பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"ஜாவா தேசத்திலுள்ள குடிசனங்களுக்குள் பரவியிருக்கும் மலேரியாக்காய்ச்சலை எதிர்த்து அதை அங்கு இல்லாமல் அழித்துப்போட அரசாங்கத்தாரால், முடியாமற் போய்விட்டதென்று திருப்பித் திருப்பிக் குறை கூறுவோர்கள், மழை மிகுதியும் 81,000 சதுரமைல்களை அடக்கியதுமாகிய இந்த ஒல்லாந்தர் இந்தியாவில் 4½ கோடி ஜனங்களையும் மலேரியாக் காய்ச்சலுக்கு இரையாக்கிவிடாமற் காத்துக் கொள்ளுகிறதற்கு என்ன தான் செய்ய முடியுமென்று யோசித்துப்பார்க்கட்டும். வறுமையின் [illegible] கல்வியறிவு மிகக் குறைவாயிருக்கும் இக்குடிஜனங்களை, மலேரியாக் காய்ச்சலை அடியோடு இல்லாமல் வழிக்கிறதற்கு வேண்டிய வழிவகைகளைத் தேடிக்கொள்ள வேண்டுமென்றும் அதற்காக நாமெல்லோரும் பாடுபடவேண்டுமென்றும் புத்திமதிகள் சொல்லி வசப்படுத்துதல் முடியாதகாரியமென்பதை மறந்துபோகக்கூடாது. கடவுளுக்காகத் தயவுசெய்து ஏதும் ஒரு முயற்சியைச் செய்ய என்று விடாப்பிடியான கேள்விக்கு இணங்கி இப்போது கொஞ்சக் காலத்திற்குமுன் பெருங் காடுகள்வெட்டியழித்தல், நீர்ப்பாய்ச்சுதல் முதலிய பலவேலைகளும் பெருந்தொகையான கூலியாட்களைக்கொண்டு ஏராளமான பணஞ்செலவிட்டுச் செய்யப்பட்டது. ஆனால் அதன் பெறுபேறென்ன? மலேரியாவின்னும் குன்றாத உக்கிரத்துடன் பரவியிருக்கின்றது. பிரசித்த கேள்வி, நெருக்கம் முதலிய இவற்றிற்குப்பயந்து நாம் இனிமேல் போதியளவு சாதனங்களும் பெருமளவு நோக்கங்களுமில்லாமல் மலேரியாக் காய்ச்சல் வராமல் தடுக்கும் வழி வகைகளைச் செய்ய எத்தனிக்கப் படாது."

யாழ்ப்பாணம் கீரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

—:o:—

நகுலமுனிவின் கீரிமுகத்தை மாற்றியதும், திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லியின் குன்மவலியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் நளன் முதலிய அரசர்களுக்கு வந்த தீராதமாகிய பெருநோய்களைப் போக்கியதுமாகிய யாழ்ப்பாணத்தில் மூர்த்திதலம் தீர்த்தம் மூன்றிலும் மகிமைபெற்றதுமான இந்தக் கீரிமலைத் தலத்திற் பழைய கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீமத் நாராயணமூர்த்திக்குத் திருக்கோயிலமைத்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைநடத்தி வருகின்றது. கேணியிலிருந்து எடுக்கப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோயிலையும், அதற்கு நேர்வடக்கில் வெள்ளையும் பன்னிர்மரமும் [illegible] கேணியின் கரையில் [illegible] பெருமானுக்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதசுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல அடியார்கள் தாமே அர்ச்சிக்கத்தக்கதாக ஒரு திருக்கோயிலையும் அமைத்து [illegible] மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்யவேண்டியிருப்பதால் அன்பர்களும் அடியார்களும் இச்சிவபுண்ணியத்தில் கலந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

கோ. த வடிவேலுமேஸ்திரி,
வல்வெட்டித்துறை.

(Q 118)

உபாத்தியாயர்கள் தேவை.

தலைமை ஆசிரியர்களாக நால்வரும், உதவி உபாத்தியாயர்களாகப் பலரும் தேவை. தராதரப்பத்திர முள்ளவர்களாயிருத்தல் வேண்டும். பயிற்றப்பட்டவர்களாயின் நன்று.

மனேசர்,
சைவவித்தியாவிருத்திச்சங்கம்,
(Mis. 1299.) யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம் லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேல் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 108.)

மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) **மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.**

இது கிறிஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்ததருக்க முடிவை இதரவோர் அறிவுபயக்கும் நூல்.
—192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) **மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.**

இது கிறிஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு.
—57 பக்கங்களையுடையது விலைசதம் 25.

(3) **கொலைமறுத்தல் பிரசினோத்தரம்.**
—விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும் பிரதான இடங்கள்.

(1) கி. ச. இராஜையன், மணல் தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
(2) ச. S. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

விசேஷ இனம்.

உயர்ந்த மிலிடெரி காக்கிட்வில் ஷேர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கட்டும் இரண்டு தோள்களில் ஷோல்டர் பட்டையும் உள்ளது. ஒன்று ரூபா 2—8. மூன்று வாங்கினால் 1 பட்டு மப்ளர் இனாம். 6 வாங்கினால் ஒரு கம்பளிப் போர்வை இனாம். இங்கிலிஷ் ட்வில் வெள்ளை ஷேர்ட் ரூ. 4. உயர்தர துணி கைதேர்ந்தவேலை. உத்தரவாதமான தையலும் பொத்தான்களும். சாதாரண கடை ஷேர்ட் அல்ல.

சுவிற்சர்லாந்தில் திறத்திறமையாய்ச் செய்யப்பட்ட அழகான 10 வருட உத்தரவாதமுள்ள
ரோல்ட்கோல்ட்
தங்க் ரிஸ்லெட் கடிகாரம். விலை ரூ. 10.
தபாற்கூலி வேறு. இது வாங்குபவர்களுக்கு பட்டு, தொட்டிகாலிப் பூச்சேலை இனாம்.

உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,
வேப்பேரி போஸ்ட்,
சென்னைபட்டணம்

ASOKA & Co,
Vepery, P. O.,
Madras.

(Q 112)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறை
விலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்க
ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மை
கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்,

Printed & published by Pandit V. T. Sambandhan
for and on behalf of the Proprietors, the Jaffna
Saiva Paripalana Sabai, at their Press, the
Saiva Prakasa Press, Vannarpannai.